**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.**

**அ.வ.எண். 39/2016**

இந்நீதிமன்றத்து பென்ஞ்ச் கிளார்க் திருமதி. தேவி அவர்களால் சத்திய பிரமானம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமுலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2025 – ஆம் ஆண்டு ஜுலை மாதம் 25** – ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

**தேதி – 25.07.2025**

**பெயர் – வெங்கடேசன்**

**த/பெ – சுப்பிரமணி**

**சாட்சி – PW1**

**வயது – 56**

**ஊர் – பசுவன்பாளையம்**

**தொழில் – டிரைவர்**

**விசாரணை தொடங்கும் நேரம்– 12.09.p.m**

**குறுக்கு விசாரணை–**

1. இந்த வழக்கை யார் யார் மீது தாக்கல் செய்தது என்றால் சேகரின் மனைவி சுமித்ரா, முத்தம்மாள் மற்றும் தனபால்ரெட்டியின் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனது தந்தை வழி பாட்டனாரின் பெயர் பொன்னுசாமிரெட்டி. பொன்னுசாமிரெட்டிக்கு 5– பிள்ளைகள். அவர்கள் யார், யார் என்றால் குப்பாரெட்டியார், இராஜகோபால் ரெட்டி, எனது தந்தை சுப்பிரமணிரெட்டி, தனபால்ரெட்டி மற்றும் எட்டியப்பரெட்டி. தாவா சொததின் சர்வே எண் என்ன என்றால் 175/4. மேற்கூறிய ஐவரில் முதலில் குப்பாரெட்டியார் தவறிவிட்டார்.

2. குப்பாரெட்டியாருக்கு ஒரு மகன் இருந்தார். அவரும் தவறிவிட்டார். அடுத்த மூத்தவர் இராஜகோபால்ரெட்டி அவர்தான் குடும்பத்தை நிர்வாகம் செய்து வந்தார் என்றால் சரிதான். மீதம் 4 நபர்கள் அவர்களுக்குள் பாகப்பிரிவினை செய்து

கொண்டார்கள் என்றால் சரியல்ல. பாகப்பிரிவினை இல்லாமல் நால்வரும் அனுபவித்து வந்தார்களா என்றால் எனது பெரியப்பா தான் எல்லோருக்கும் கிரையம் செய்தார். எட்டியப்பரெட்டியாருக்கு எழுதிகொடுத்துவிட்டார், என் தகப்பனாருக்கும் எழுதி கொடுத்துவிட்டார், மற்ற இருவருக்கும் அவர் கொடுக்கவில்லை.

3. இராஜகோபாலரெட்டியார் மூத்தவர் என்ற நிலையில் தாவா சொத்தின் சர்வே எண்ணின் விஸ்தீரணம் ஏக்கர் 2.50 செண்ட் நிலம் 1964–ல் இராஜகோபால் ரெட்டியார் மீது கிரையம் பெறப்பட்டது என்றால் சரிதான். இரண்டு அண்ணன் தம்பிகளும் அவர்களுக்குள் 2.50 செண்ட் நிலத்தில் தலா 4 பாகங்களாக நபர் ஒருவருக்கு 62.5 செண்ட் நிலம் பிரித்து ஒதுக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது, அது என் பெரியப்பா சொத்து என்று என் தகப்பனார் கூறினார். தாவா சொத்தின் அளவு எவ்வளவு என்றால் ஏக்கர் 1.25 செண்ட் நிலம். மேலே கூறிய 2.50 செண்ட் நிலத்தில் ஏக்கர் 1.25 செண்ட் எந்த பக்கம் என்றால் நடு பாகம்.

4. மீதி நிலங்கள் கிழக்கே 62.5 செண்ட் மேற்கே 62.5 செண்ட் என்றால் சரிதான். அந்த கிழக்கே 62.5 செண்ட் நிலம் எட்டியப்பரெட்டியாரின் பாகம் ஆகும். மேற்கே 62.5 செண்ட் நிலம் இராஜகோபால்ரெட்டி பாகம் என்றால் சரிதான், அதை அவர் எட்டியப்பரெட்டிக்கு எழுதிக்கொடுத்துவிட்டார். தாவா சொத்து ஏக்கர் 1.25 செண்ட் மேற்கே 62.5 செண்ட் எனது தகப்பனார் சுப்பிரமணிரெட்டியின் பாகம் என்றால் சரிதான்.

5. தாவா சொத்து மேற்கே 1.25 செண்ட் நிலம் போக மீதுமுள்ள கிழக்கில் உள்ள 62.5 செண்ட் நிலம் தனபால் ரெட்டியின் பாகம் என்றால் சரியல்ல. தனபால்ரெட்டி அவருக்கு உடைய 62.5 செண்ட் நிலத்தை 1993–ல் அவரின் மனைவியான முத்தமாளுக்கு செட்டில்மெண்ட் எழுதி கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. அவ்வாறான செட்டில்மெண்ட் ஆவணத்தில் தாவா சொத்திற்கான பழைய அவணம் இராஜகோபால்ரெட்டி மீதி இருந்ததால் அவர் அந்த பத்திரத்தில் சாட்சி கையெழுத்துபோட்டார் என்றால் எனது பெரியப்பா இராஜகோபால்ரெட்டி சொல்லிருக்கிறார். இரங்கநாதநாயுடுவிற்கு என் தந்தைக்கு வந்துசேர்ந்த பாகத்தை விற்றார் என்றால் நான் சிறிய வயதாக இருக்கும்போது என் தந்தை விற்றதாக என்னிடம் கூறினார்.

6. ஆனால் அதற்கான பத்திரத்தில் எனது தகப்பனார் விற்கும் நபராக கையெழுத்து இடாமல் இராஜகோபால்ரெட்டி கிரையம் செய்யும்போது பத்திரத்தில் எனது தகப்பனார் சாட்சி கையொப்பம் போட்டார் என்றால் சரியல்ல. எனது தந்தை அவருக்கு சொந்தமான பாகத்தை மட்டும் விற்காமல் தனபால்ரெட்டியின் பாகத்தையும் சேர்த்து, இரங்கநாதநாயுடுவிற்கு வா.சா.ஆ 1 பத்திரம் மூலம் எழுதிக்கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. (வா.சா.ஆ 1 சாட்சியிடம் காண்பிக்கப்பட்டது) அதில் உள்ள சாட்சி கையெழுத்து என் தந்தை கையெழுத்து என்றால் சரியல்ல. அந்த காரணத்தினால் தான் முத்தமம்மாள் வகையரா இதே நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 94/1998 என்ற வழக்கினை தாக்கல் செய்தார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும்.

7. அந்த வழக்கில் இராஜகோபால் ரெட்டி, சுப்பிரமணிரெட்டி, இரங்காநாதநாயுடு ஆகியோரை தரப்பினர்களாக இருந்தார்கள் என்றால் சரிதான். அந்த வழக்கு விசாரணைக்கு பிறகு முத்தம்மாள் வகையராவிற்கு சாதகமாக தீர்ப்பானது என்ற விவரம்ட தெரியுமா என்றால் ஒருதலைபட்சமாக தீர்ப்பானது. மேற்கூறிய வழக்கு ஒருதலைபட்சமாக தீர்ப்பாகவில்லை என்றும், எனது தந்தை அந்த வழக்கை நடத்திய பிறகு தான் அது தீர்ப்பானது என்றும் கூறினால் சரியல்ல. அந்த வழக்கில் எனது தந்தை சுப்பிரமணிரெட்டி அந்த வழக்கை நடத்தி அதில் சாட்சியமும் அளித்துள்ளாா் என்றால் சரியல்ல.

8. அந்த வழக்கு நிலுவையில் இருக்கும்போது தான் ஜமுனா மற்றும் இந்த வழக்கின் வாதியான சுமித்ரா ஆகியோர்கள் வழக்கு சொத்தை கிரையம் பெற்றார்கள் என்றால் கிரையம் பெற்றது தெரியும், ஆனால் வழக்கு சொத்து நிலுவையில் இருந்த போது தான் பெற்றார்கள் என்ற விவரம் தெரியாது. முத்தம்மாள் வகையறா அந்த வழக்கின் தீர்ப்பாணையை வைத்து வழக்கு சொத்தில் அவர்கள் நிலத்தை ஸ்வாதீனம் ஒப்படைத்துக்கொண்டார்கள் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் வெளியூரில் இருப்பதை பயனபடுத்தி கொண்டு வழக்கு சொத்தில் வாதியும் அவரது கணவரும் அத்துமீறி ஸ்வாதீனம் எடுத்துக்கொண்டார்கள் என்றால் சரியல்ல.

9. அது சம்பந்தமாக தகறாறு ஏற்படும்போது தான் பிரதிவாதிகள் சோழவரம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்து காவல் துறையினர் விசாரித்தார்கள் என்றால் சரிதான். அதன் பின்பு தான் வாதி பிரதிவாதிகளின் மீது இந்த வழக்கை தாக்கல் செய்தார் என்றால் சரிதான். பிரதிவாதிகள் மீண்டும் அவர்கள் நிலம், அவர்கள்

ஸ்வாதீனம் வேண்டும் என்று இந்த வழக்கில் எதிர் பரிகாரம் கோரியுள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது. எனது பிரமாணவாக்குமூலத்தில் நான் சாட்சியத்தில் கூறியுள்ள பல விவரங்களை கூறவில்லை என்றால் சரியல்ல. தவறாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**விசாரணை முடியும் நேரம். 12.45.p.m.**